ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கத் தவறினால் அவ்வறங்காவலர் குழுவின் அங்கத்தினர்களில் ஒருவரைத் தலைவராக நியமிக்க 48-ஆவது பிரிவு ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கிறது. அறங்காவலர் குழுவை அமைப்பதற்கு ஆணையாளருக்குள்ள அதிகாரங்களும், அலுவல்களும் ஒப்படைக்கப்படுவதே இச் சட்டத்தின் 13 (2) ஆவது பிரிவின் கீழ்த் தடை செய்யப்பட்டுள்ளபோது, 48 ஆவது பிரிவின் கீழ் அறங்காவலர்க் குழுவின் தலைவரை நியமிப்பதற்கு ஆணையாளருக்குள்ள அதிகாரங்களை ஒப்படைப்பது பொருத்தமின்மையாகும்.

(1960 ஆம் ஆண்டு, சனவரி மாதம், 27 ஆம் தேதி, 472 எண் நிலை அ.ஆ.)

IV ஆவது அத்தியாயம் வட்டாரக் குழுக்கள்

16. வட்டாரக் குழுவுக்கு ஓர் உறுப்பினரை நியமிப்பதற்கான யோசனைகள் அனுப்பும்போது உதவி ஆணையாளர் தாம் செய்யும் பரிந்துரை நியாயமானதெனக் காட்டுவதற்கான முழுக் காரணங்களையும், அப் பதவியை நாடிய மற்றவர்களின் தகுதி அல்லது தகுதியின்மை பற்றி தெரிவிக்க வேண்டும்.

(1954 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 5 ஆம் தேதி, 6046/54 ப.மு. எண்.)

17. மாநில அரசாங்கத்தால் அமைக்கப் பெற்ற குழுக்களின் கூட்டங்களுக்கு நேரில் செல்வதற்காக நாடாளும் மன்றத்தின் உறுப்பினர்களுக்கு இருப்புப்பாதைக் கட்டணம் எதுவும் அளிக்கப் படமாட்டாது. ஏனெனில் அவ்வுறுப்பினர்கள் இந்திய அரசாங்கத்தால் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இலவச முதல் வகுப்பு அனுமதிச் சீட்டுகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆயினும், அங்கத்தினர்களுக்கு குழுவின் இதர உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் அனுமதிக்கப்படக்கூடிய வழக்கமான நாட்படி பகுதி இருப்புப்பாதைக் கட்டணம் முதலியவை அளிக்கப்பட வேண்டும்.

(1956 ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 8 ஆம் தேதி, 466 நிலை அ.ஆ.)

18. வட்டாரக் குழுவின் உறுப்பினர்களின் வருகையைக் கவனித்து வரும் நோக்குடன் உதவி ஆணையாளர் கீழ்க் காணும் படிவத்தில் காலாண்டு முன்னேற்ற அறிக்கையை அக் காலண்டுக்கு அடுத்த மாதம் 15 ஆம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்.

10 எண் காலமுறை விவர அறிக்கை

வட்டாரக் குழுவின் கூட்டங்களைக் காட்டும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்.

(1) வட்டாரக் குழுவின் பெயர்.	(2) கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.	(3) நடந்த கூட்டங்களின் தேதி.	(4) கூட்டங்களுக்கு வந்திருந்த உறுப்பினர்களின் பெயர்கள்.	(5) கூட்டத்திற்கு ஏற்பட்ட குறைவெண் வரம்பு இன்மையால் தள்ளி வைக்கப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.	(6) கூட்டத்திற்கு ஏற்பட்ட குறைவெண் வரம்பு இன்மையால் தள்ளி வைக்கப்பட்ட கூட்டங்களுக்கு வந்திருந்த உறுப்பினர்களின் பெயர்கள்.	(7) இச் சட்டத்தின் 6 (5) ஆவது பிரிவில் கண்டுள்ளவாறு பதவி வகிக்க எந்த உறுப்பினராயினும் தகுதி யற்றவராகி இருக்கிறாரா ?	(8) குறிப்புரை.

(1953 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 1 ஆம் தேதி, 36715/5-53 பொது எண் ஆணையாளரின் குறிப்பாணை.)

19. வட்டாரக் குழுக்களின் எல்லா உறுப்பினர்களும் கூட்டங்களுக்கு ஒழுங்காய் வர வேண்டுமென்னும் அவசியத்தை வற்புறுத்தும் வகையில் அரசினர், அக் குழுக்களின் உறுப்பினர் எல்லோருக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

(1953 ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 7 ஆம் தேதி, 54830 ஓ.ந. 4-53 எண் அரசாங்கக் குறிப்பாணை.)

(II ஆவது இணைப்பைக் காண்க.)

20. வட்டாரக் குழுக்களின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்கள் அலுவல்களைச் செய்துவர இயலுமாறு அவர்களுக்கு உதவி ஆணையாளர்கள் முழு ஒத்துழைப்பும் உதவியும் அளிக்க வேண்டும். யாதொரு தீர்மானத்தை நிறைவேற்றுமுன் குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி நேரடியாகக் கலந்து ஆலோசனை செய்ய இயலுமாறு ஆய்வாளர்கள் கூட்டங்களில் வந்திருக்க வேண்டுமென்று வட்டாரக் குழுக்கள் விரும்பினால் ஆய்வாளர்கள் அவ்வாறே வந்திருக்க வேண்டுமென்று உதவி ஆணையாளர் கட்டளையிடலாம்.

(1960 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 15 ஆம் தேதி, 23750/60 எண் நி.மு.)

21. 21 ஆவது பிரிவு.—மறு ஆய்வு மனுக்களைப் பற்றி இச் சட்டத்தின் 21 ஆவது பிரிவின்படி உதவி ஆணையாளர்கள் வட்டாரக் குழுவிடமிருந்து குறிப்புரை பெற வேண்டும். யாதொரு மறு ஆய்வு மனு சம்பந்தமாக உதவி ஆணையாளர்கள் தங்கள் சொந்தக் குறிப்புரையை அனுப்புவது பொருத்தமானதென்று தாங்கள் கருதினால், அவ்வாறே அவற்றைத் தனிப்பட்ட முறையில் அவர்கள் எழுதி அனுப்பலாம்.

(1952 ஆம் ஆண்டு, மே மாதம், 6 ஆம் தேதி, 28/52 பொது எண் சுற்றறிக்கை.)

22. சம்பந்தப்பட்ட நிலையத்தின் நலனை முன்னிட்டுச் சட்டப்படி நியமிக்கப்படக் கூடிய அறங்காவலர்களை ஏன் நியமிக்கக் கூடாது என்பதற்கும் அறங்காவலர்களை நியமிப்பதற்கான நோக்கம் ஏன் நிறைவேற்றப்படக் கூடாது என்பதற்கும் காரணம் தெரிவிக்குமாறு மேலாண்மை செய்யும் பொறுப்பு வகிப்பவர்களுக்கு அறிவிப்பு கொடுப்பதை உதவி ஆணையாளர்கள் கவனிக்க வேண்டும். பதில்களும் ஆட்சேபனைகளும் எவையேனும் வரப்பெற்றால், அவற்றை வட்டாரக் குழுவின் ஆலோசனைக்காக வைக்க வேண்டும்.

(1954 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 21 ஆம் தேதி, 37046/54 எண் ப.மு.)

23. அறங்காவலர் குழுவின் தீர்மானத்தின் மீது மறுப்பாணை.— யாதொரு கோயிலின் அறங்காவலர் குழுவின் தீர்மானத்தை மறுப்பதற்குமுன் எவரெவர் பிறப்பித்த ஆணைகள் அல்லது பரிந்துரைகள் இதனால் கெடுதலாகப் பாதிக்கப்படுகின்றனவோ அவரவர் பிறப்பித்த ஆணைகள் அல்லது பரிந்துரைகள் ஏன் மாற்றி அமைக்கப்படக்கூடாது அல்லது ரத்து செய்யப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அவர்களுக்கு நியாயமான ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

(1957 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 16 ஆம் தேதி, 3229/57-ஈ 2 எண் நி.மு.)

24. ஹரிஜனங்கள் வசிக்கும் தெருக்களின் வழியாகத் தெய்வங்களை ஊர்வலமாக கொண்டு செல்வது.—கோயில்களுக்குச் சென்று தெய்வத்தை வழிபடத் தற்போது ஹரிஜனங்களால் இயலுமாதலால் தெய்வத்தை ஊர்வலமாகக் கொண்டு செல்வது அவர்களுக்கு அவ்வளவு முக்கியமானதாகாது. ஒரு கிராமம் அல்லது நகரத்திலுள்ள எல்லாத் தெருக்களின் வழியாகவும் தெய்வத்தை ஊர்வலமாகக் கொண்டு செல்வதில்லை. மேலும் குறிப்பிட்ட தெருக்களின் வழியாகத் தெய்வத்தை ஊர்வலமாக கொண்டு செல்வது, நீண்டகாலமாக இருந்துவரும் வழக்கத்தை அனுசரித்து முறையாக நடைபெற்று வருகிறது. அத்தகைய பழக்க வழக்கத்தை மாற்றியமைப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்றால், அது, தீராத தகராறுகளுக்கும் செலவுமிக்க வழக்குகளுக்கும் வழி வகுக்கும். மேலும் தற்போதுள்ள நடைமுறை, ஹரிஜன தெருக்கள் தனியாக இருக்க வேண்டுமென்பதான நிலையை அமைத்துவிடுவதாகப் பொருள் கொள்ளக் கூடாது. சட்ட முறைப்படி, சமய நிலையங்களின் சமயச் சார்பற்ற நடவடிக்கைகளின் மீது நிர்வாகம் செய்ய அரசினருக்கு அதிகாரம் உள்ளதே தவிர, சமய சம்பந்தமானவற்றில் அரசினர் தலையிடுவதில்லை.

(1958 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 20 ஆம் தேதி, 89337 உ./2-58 எண் அரசாங்கக் குறிப்பாணை, 25986/58 எண் நி.மு.)

V ஆவது அத்தியாயம்—சொத்துகள் பதிவேடு.

25. சொத்துகள் பதிவேடுகள் வரப்பெறுவதையும் அவற்றை அங்கீகரிப்பதையும் கவனித்து வருவதற்காக கீழ்க் காணும் 14 எண் காலமுறை விவர அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கால முறை விவர அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

13. எண் காலமுறை விவர அறிக்கை.

இந்து சமய அற நிலையச் சட்டத்தின் 29 ஆவது பிரிவின்கீழ் பதிவேடு வரப்பெறுவதில் மாத முன்னேற்ற அறிக்கை.

பதிவேடுகள் எந்த நிலையங்களிலிருந்து வரவேண்டுமோ அவை அந்தக் கோட்டத்தில் எத்தனை எண்ணிக்கையில் உள்ளன என்பது.	சென்ற மாதத்தின் இறுதி வரையில் வரப்பெற்ற பதிவேடுகளின் எண்ணிக்கை.	நிகழ் மாதத்தில் வரப்பெற்ற பதிவேடுகளின் எண்ணிக்கை.	(2), (3) கட்டங்களின் மொத்தம்.	மாத இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதிவேடுகளின் எண்ணிக்கை.	வரப்பெறுதவற்றின் எண்ணிக்கை.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

26. தல அலுவலர்களின் சரிபார்த்தல் அறிக்கைகள் குறைபாடுகள் உடையவை எனத் தெரிய வருவனவற்றில் மட்டுமே உதவி ஆணையாளர்கள் நேர்முக விசாரணைகள் நடத்தலாம். ஆயினும், பெரிய நிலையங்களின் சொத்துகள் பதிவேட்டை உதவி ஆணையாளர்களே சரிபார்த்தலுக்காக எடுத்துக் கொள்வது விரும்பத்தக்கது.

(1946 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 2 ஆம் தேதி, 137/46 பொது எண் சுற்றறிக்கை.)

27. இப்பதிவேடு எழுதுவது சம்பந்தமாக விவரமான அறிவுரைகள் கொடுக்கப்பட்டுள்ளன :—

(1951 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 14 ஆம் தேதி, 32/இ பொது எண் சுற்றறிக்கை. 12778/51 எண் நி.வை.மு. II ஆவது இணைப்பைக் காண்க.)

28. இப்பதிவேடுகள் ஆண்டுக்கொரு முறை சரிபார்க்கப்படு கின்றனவா என்பதைக் கவனித்து வருவதற்காக அடுத்துவரும் பசலியின் 15 ஆம் நாளன்று ஆணையாளருக்கு, துணை ஆணை யாளர்களும் உதவி ஆணையாளர்களும் 68 எண் காலமுறை விவர அறிக்கை அனுப்ப வேண்டும்.

68 எண் கால முறை விவர அறிக்கை

ஆண்டு) பசலி).

1. கோட்டத்திலுள்ள நிலையங்களின் எண்ணிக்கை.

2. முந்திய பசலி ஆண்டு தொடக்கம் வரையில் மேற்படி சட்டத்தின் 29 ஆவது பிரிவின்கீழ் அங்கீ கரிக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகளின் எண்ணிக்கை.

3. (2) ஆவது கட்டம் சம்பந்தமாக, பசலி ஆண்டு தொடக்கம் வரையில் இச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின்கீழ்ப் பெறப் பட்ட விவர அறிக்கைகளின் எண்ணிக்கை.

4. பசலி ஆண்டில் இச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின்கீழ்ப் பெறப் பட்ட விவர அறிக்கைகளின் எண்ணிக்கை.

5. (3), (4) கட்டங்களின் மொத்தம்.

ஆணையர் அலுவலகம்,
இ. ச. அ. ஆ. துறை,
சென்னை - 34.

6. நிலுவை அதாவது பசலி ஆண்டு இறுதியில் இச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின்கீழ்ப் பெற வேண்டிய ஆண்டு ஆய்வு விவர அறிக்கைகள் சம்பந்தமாய் (2) ஆவது கட்டத்தில் குறிப்பிடப்படும் நிலையங்களின் எண்ணிக்கை. கட்டம் (2—5).

7. குறிப்புரை.

(1960 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 10 ஆம் தேதி 2332/60 எண் நி.மு.)

29. மாற்றங்கள், விடுபடல்கள், கூடுதல்கள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துத் தொகுக்கப்பட்ட பதிவேடு ஒன்றை பத்து ஆண்டுக்கொரு முறை அனுப்ப வேண்டும். இந்தப் பதிவேடு வரப்பெறுவதைக் கவனித்து வருவதற்காக, துணை ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் அடுத்து வரும் பசலியின் ஜூலை மாதம் 15 ஆம் தேதியன்று ஆணையாளருக்கு அனுப்ப வேண்டிய 69 எண் காலமுறை விவர அறிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

69 எண் காலமுறை விவர அறிக்கை
ஆண்டு (   ) பசலி.

1. கோட்டத்திலுள்ள நிலையங்களின் எண்ணிக்கை.

2. பசலி ஆண்டு ஆரம்பத்தில் 10 ஆண்டுகளுக்கும் அதற்கு மேற்பட்டும் பழமையடைந்தவையும் இச் சட்டத்தின் 29 ஆவது பிரிவின் கீழ், அல்லது 1951 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் நிகரான 25 ஆவது பிரிவின் கீழ் அல்லது 1920 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின்

கீழ் அங்கீகரிக்கப்பட்டவையு
மான சொத்துப் பதிவேடுகளின்
எண்ணிக்கை.

3. (2) ஆவது கட்டத்தில் காட்டப்
பட்டுள்ளவற்றில் இச் சட்டத்தின்
31 ஆவது பிரிவின்கீழ் வரப்
பெற்ற பதிவேடுகளின் எண்
ணிக்கை.

4. நிலுவை பாக்கி [கட்டங்கள் (2)-(3)]

5. இச் சட்டத்தின் 31 ஆவது
பிரிவின் கீழ் (3) ஆவது கட்
டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு
வரப்பெற்ற மொத்த பதிவேடு
களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட
பதிவேடுகளின் எண்ணிக்கை.

6. ஏற்பு முடிவாகாமல் பாக்கியாக
இருப்பன [கட்டங்கள்
(3)—(5)].

7. குறிப்புரை.

(1960 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 10 ஆம் தேதி, 2932/63
எண் நி.மு.)

VI ஆவது அத்தியாயம் சமயநிலையங்களின் ஆய்வு.

30. இச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ், யாதொரு சமய நிலையத்துக்குச் சொந்தமான அசையும் சொத்து, அசையாச் சொத்து அனைத்தையும் பதிவுக் கட்டுகள், கடிதப் போக்கு வரத்துகள், திட்டங்கள், கணக்குகள், பத்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஆய்வு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப் படுகிறது.

மூன்று வினாப்பட்டிகள்—நிலையங்களின் ஆய்வு சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்காக, 1,000 ரூபாய்க்கும் குறைந்த வருமானம் பெறும் நிலையங்களுக்காக ஒன்றும், 1,001 ரூபாய் முதல் 20,000

ரூபாய் வரையில் வருமானம் பெறும் நிலையங்களுக்கு மற்றொன்றும், 20,000 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் வருமானம் பெறும் நிலையங்களுக்காக மூன்றாவதும் ஆக வினாப் பட்டிகள் உதவி ஆணையாளர்களுக்கும் துணை ஆணையாளர்களுக்கும் கொடுக்கப் பட்டுள்ளன. மேற்படி வினாப்பட்டிகளின் படிவங்களை II ஆவது இணைப்பில் காண்க.

(1959 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் தேதி 8165/59 எண் நி.மு.)

VII ஆவது அத்தியாயம்—பொது

31. சமய நிலையங்களில் ஏற்படக்கூடிய திருட்டுகளைத் தவிர்ப்பது.—திருட்டுகளைத் தவிர்ப்பதற்கும், திருட்டுகள் சம்பந்த மாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைப் பற்றியும், சமய நிலையங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு விவரமான அறிவுரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(1954 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி, 20753/54 நி.மு./ எண் 1953 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆம் தேதி 61764/53 எண் நி.மு. III ஆவது இணைப்பைக் காண்க.)

32. சமய நிலையங்களுக்கு நன்கொடை அளித்தவர்களின் பெயர்களை நன்கொடைப் பொருள்களின் மீது எழுதுவது.— நன்கொடை அளிப்பவர்களின் பெயர்களையும் நன்கொடையாகப் பெறப்பட்ட பொருள்களையும் காட்டுவதற்குத் தனிப் பதிவேடுகள் இருப்பதால், நன்கொடை அளிப்பவர்கள், தங்கள் பெயர்களை நன்கொடைப் பொருள்களின் மீது பொறிக்க வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்பதாக நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவுரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(1958 ஆம் ஆண்டு, மே மாதம், 1 ஆம் தேதி 2943/58 எண் நி.மு.)

VIII ஆவது அத்தியாயம்- குத்தகை

33. ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவுக் குத்தகையை ஆணையாளராயினும் அரசாங்கமாயினும் இச் சட்டத்தின் 34, 41 பிரிவுகளின் கீழ் அனுமதித்தாலன்றி மற்றபடி

அது சட்டப்படி செல்லாது. நிலங்கள், கட்டட மனைகள் முதலியவற்றின் குத்தகையைப் பொறுத்தவரையில் அரசினர் விதிகளை இயற்றியுள்ளனர். ஆண்டுக் குத்தகைத் தொகை, 500 ரூபாய் அல்லது அதற்கு அதிகமான ரூபாய் அல்லது அதற்கு நிகரான நெல் அல்லது இதன் விளைபொருள்களாகச் செலுத்த வேண்டுமென்னும் நிபந்தனையைக் கொண்ட எல்லா குத்தகைகளையும் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய குத்தகைகளை மறுப்பாணை மூலம் ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. ஆணையாளரிடம் அறிக்கை வரப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதக் காலத்திற்குள், குத்தகை விட மறுக்கும் வகையில் அல்லது ரத்து செய்யும் வகையில் ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை என்றால், குத்தகை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே கொள்ள வேண்டும். குத்தகைக்கு விட மறுப்பாணை பிறப்பிக்கும் அதிகாரத்தை ஆணையாளர் செலுத்தாத போது, கட்சிக்காரருக்கு பதில் எதுவும் அனுப்பப்படுவதில்லை.

34. நிர்வாக அதிகாரிகள் குத்தகை ஏலங்களைப் பற்றிய அறிக்கைகளை இரு பிரதிகளில், ஆணையாளருக்கு நேரடியாக ஒன்றும், இடத்திற்கேற்ப உதவி ஆணையாளருக்கோ துணை ஆணையாளருக்கோ, மற்றொன்றுமாக அனுப்பவேண்டும். துணை ஆணையாளரும். உதவி ஆணையாளரும் வந்த அறிக்கைகளின் இரண்டாம் பிரதிகளை, கீழ்க்காணும் விவரங்களைக் கொண்ட குறிப்புரையுடன் 3 நாள்களுக்குள் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும் :—

(அ) முழு விளம்பரம் செய்யப்பட்டதா என்பதும் ;

(ஆ) எல்லா விதிகளும் அனுசரிக்கப்பட்டனவா என்பதும்;

(இ) கடும்போட்டி இருந்ததா என்பதும், ஏலத்தின்போது போதுமான எண்ணிக்கையில் ஏலங் கூறுபவர்கள் பங்கெடுத்துக் கொண்டனரா என்பதும் ;

(ஈ) மிக அதிகமான ஏலத் தொகை, கடந்த 3 ஆண்டுகளின் குத்தகைகளுடனும், அடுத்துள்ள தனியாளர் நிலங்களுக்குள்ள குத்தகைகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நியாயமானதாக இருக்கிறதா என்பதும்.

(ஆணையாளரின் 1953 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 24 ஆம் தேதி, 16812/53-2 அ-3 என் குறிப்பாணை.)

35. ஆய்வு செய்யும் அலுவலர்களோ அலுவகப் பணி யாளரமைப்பைச் சேர்ந்த இதர உறுப்பினர்களோ ஏல விற்பனை களுக்காக வந்திருந்தால் நிர்வாக அதிகாரிகளின் வழக்கமான அறிக்கைகளுக்குக் காத்திராமல், கீழ்க்காணும் படிவத்தில் அறிக்கைகளை அவர்கள் அனுப்ப வேண்டும்:—

1. நிலையத்தின் பெயர்.

2. ஏல விற்பனைத் தேதியும் அது நடைபெற்ற நேரமும் இடமும்.

3. அறிவிப்பிலுள்ள இனத்தின் எண்.

4. நிலத்தின் தன்மை.

5. நன்செய் அல்லது புன்செய்.

6. பரப்பளவு.

7. இந்நிலம் முன்னதாகக் குத்தகைக்கு விடப்பட்டிருந்த கால அளவும், கடந்த 3 பசலிகளில் கிடைத்த குத்தகைத் தொகைகளும்.

8. முந்திய குத்தகை பொது ஏல விற்பனையின் மூலமாக அல்லது தனிப்பட்ட பேச்சு வார்த்தை மூலமாக விடப்பட்டதா என்பதும்; குத்தகை எடுத்தவரின் பெயர், செலுத்தப்பட்ட பிணைத் தொகை, குத்தகைப் பத்திரம் எழுதி வாங்கப்பட்டதா என்பதும், குத்தகை, நிபந்தனைகளுக்குட்பட்டிருந்ததா அல்லது நிபந்தனைகளுக்குட்படாமலிருந்ததா என்பதும்.

9. குத்தகை எடுத்தவர் குத்தகைத் தொகையைப் பாக்கி வைத்திருந்தாரா அல்லது வரவேண்டிய எல்லாப் பாக்கித் தொகைகளையும் கோயிலுக்கு முழுமையாகச் செலுத்தினாரா என்பதும்.

10. உத்தேசிக்கப்பட்ட குத்தகையின் கால அளவு.

11. மிக அதிகமான ஏலத் தொகை கூறியவர் அல்லது வேறு தொகை கூறியவர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அத்தகையவரின் பெயரும், 6 ஆவது விதியின் கீழ், எழுத்து வடிவில் பதிவுசெய்யப் பட்ட காரணங்களும்.

12. அருகில் அதைப் போன்ற நிலங்களில் ஏக்கருக்கு தற்போதுள்ள விலை வீதம்.

13. ஏல விற்பனையின் போது எந்த அறங்காவலராயினும் வந்திருந்தாரா, அவ்வாறு வந்திருந்தால் அவரது பெயர்.

14. உதவி ஆணையாளருக்கோ ஆய்வாளருக்கோ ஏல விற்பனையைப் பற்றிய தகவல் அனுப்பப்பட்டதா, அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தால், எப்போது ?

15. ஏல விற்பனையின்போது துறையைச் சேர்ந்த எந்த அலுவலராயினும் வந்திருந்தாரா என்பதும் ; அவ்வாறு வந்திருந்தால் தன் அடையாளமாக ஏல விற்பனைப் பதிவேட்டில் அவர் கையொப்பமிட்டுள்ளாரா என்பதும்.

16. ஏல விற்பனையில் விடப்படும் குத்தகைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விதிகளும் அனுசரிக்கப்பட்டனவா ; ஏல விற்பனை அத்தகைய விதிகளின்படி நடத்தப்பட்டிருக்கிறதா என்பதும்—

(1) 2 (1) ஆவது விதியின் கீழ், குத்தகையின் ஏற்பாடுகளையும் நிபந்தனைகளையும் கவனிப்பதற்காக அறங்காவலர்கள் கூட்டம் எப்போது நடந்தது என்பதும்;

(2) குத்தகை விதிகளின் 2 (1) ஆவது விதியில் குறிக்கப்பட்டுள்ளனவெல்லாம் கவனிக்கப்பட்டுள்ளனவா என்பதும், அமலிலுள்ள குத்தகையின் கால அளவு இறுதியடைவதற்கு முன் குறைந்தது 3 மாதங்களுக்கு கூட்டம் நடத்தப்படாமலிருப்பின், அவ்வாறு தவறியதற்காக அறங்காவலரின் விளக்கம்.

(3) இவ்விதிகளின் 3 ஆவது விதியில் கூறப்பட்டுள்ளவற்றிற்குத் தக்கவாறு ஏல விற்பனை பற்றி விளம்பரம் செய்யப்பட்டதா என்பதும்.

(4) ஏல விற்பனையை நடத்தியவரது பெயர்.

(5) ஏல விற்பனை அறிக்கையின்படி செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகையும் உள்ளபடி செலுத்தப்பட்ட வைப்புத் தொகையும்.

(6) பிணைத் தொகை ஏதாவது செலுத்தப்பட்டதா அல்லது 2 ஆவது பிரிவின் கீழ் மனு ஏதாவது துணை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டதா என்பதும்;

36. ஏலத்தாள்கள்—வைத்துவருவது பற்றிய அறிவுரைகள்.—மாதிரிக்காகக் கீழே விவரிக்கப்பட்டுள்ள மாதிரியில் தனித் தனித் தாள்களில் சொத்தின் ஒவ்வொரு இனத்தையும் விளக்குவது தான் ஏலப் பட்டியலை எழுதுவதில் பின்பற்ற வேண்டிய தகுந்த முறையாகும்:—

முதல் தாள்

வரிசை எண்.		பரப்பளவு ஏக்கர்கள் கலங்கள்.	விவரிப்பு தளைசெய் ரொக்கம். ரூ.
தொடக்க ஏலத் தொகை	..	1,000	200
ராமன் ..	..	1,010	210
கோவிந்தன் ..	..	1,015	215
ராமசாமி ..	..	1,030	240
கோவிந்தன் ..	..	1,040	250
ராமசாமி ..	..	1,060	260
கிருஷ்ணன் ..	..	1,065	265

இதற்கு மேல் ஏலத் தொகை இல்லை.

கிருஷ்ணன் கூறிய ஏலத் தொகை, அதாவது, ஆயிரத்து அறுபத்து ஐந்து (1,065) கலங்களாகவும், இருநூற்று அறுபத்து ஐந்து (265) ரூபாய் ரொக்கமாகவும், மிக அதிக ஏலத் தொகையாக இருந்ததால், ஏலங் கூறின அவருக்கே விடப்பட்டது.

கையொப்பங்கள்—

ராமன்,
கோவிந்தன்,
ராமசாமி.

ஏலத்திற்கு வந்திருந்த
ஏலங் கூறுபவர்கள்

ஏல விற்பனையின்போது வந்திருந்த
சிலர் கையொப்பங்கள்.

ஏல விற்பனையை நடத்தும், நிர்வாக அலுவலர்,
அறங்காவலர்கள், மற்றவர்கள் ஆகியோரின்
கையொப்பம்

இதே போல சொத்தின் இரண்டாவது இனத்தை வேறொரு தாளில் குறிக்க வேண்டும். பின்னர், உறுதிப்படுத்தப்பட்ட எல்லா ஏல விற்பனைத் தொகைகளையும் தனித் தாளில் அட்டவணைப் படுத்தி ஏலத் தாள்களை அதனுடன் இணைப்புகளாகக் கோத்து வைக்க வேண்டும்.

ஏலங்கூறவந்தவர்கள் முன்பணமாகச் செலுத்திய வைப்புத் தொகைகள் சம்பந்தமாய், ஒவ்வொரு ஏல விற்பனையையும் பற்றிக் கீழ்காணும் படிவத்தில் தனித் தனித் தாள்களை வைத்து வரவேண்டும் :—

ஏலங் கூற விரும்பும் நபரின் பெயரும், முன்பணமாகச் செலுத்தப்படும் வைப்புத் தொகையும்.		வைப்புத் தொகைகளைத் திருப்பிக் கொடுப்பது.	
பெயர்.	வைப்புத் தொகைகள்.	வைப்புத் தொகை செலுத்தியவரது கையொப்பமும் தேதியும்.	தொகை.
(1)	(2)	(3)	(4)
	ரூ.		ரூ.

(1953 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 14 ஆம் தேதி, 65-அ3 எண் சுற்றறிக்கை.)

37. சொத்துகளைக் குத்தகைக்கு விடுதல்.—ஆய்வாளர்களை அனுப்புதல்.—ஆண்டுக் குத்தகை 500 ரூபாய்க்கும் அதற்கும் மேற்பட்ட ஏல விற்பனைகளுக்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும்; மோசடி ஏதாவது உண்டா என்பதில் சந்தேகம் இருந்தாலன்றி மற்றபடி எல்லா ஏல விற்பனைகள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஆய்வாளர்கள் நீதிமன்ற வேலையில் ஈடுபட்டிருந்தால் இதற்காக எழுத்தர்களை நியமிக்கலாம். குத்தகை வரும் நிலையங்களில் சம்பளம் பெறும் அலுவலர்கள்

இல்லாது போதும், கிராமங்களில் கட்சிச் சண்டைகள் அல்லது தீய உள்நோக்கம் இருக்கும்போதும் இதில் தனிக் கவனம் செலுத்த

(1952 ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 27 ஆம் தேதி, ஓ.மு. 49753/52 எண்.)

38. இடத்திற்கேற்றவாறு ஆணையாளரிடமிருந்து குத்தகை பற்றிய அறிக்கை வந்து சேர்ந்த பின்னர் ஒரு மாதக் கால அளவு இறுதியடையும் வரையில் அல்லது அந்தக் குத்தகை தகுந்த அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் காத்திராமல், குத்தகை எடுத்தவர்களிடம், சொத்துகளை ஒப்படைக்கக் கூடாது. இதற்காகக் குறிப்பிட்ட நிபந்தனையை ஏல விற்பனை அறிவிப்பில் சேர்க்க வேண்டும்.

(1955 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 24 ஆம் தேதி, 5809/55 எண் ப.மு.)

39. கோயில் பணியாளர்களால் அல்லது துறையைச் சேர்ந்த பணியாளர்களால் குடியிருக்கும் கட்டடங்கள் பயன்படுத்தப் பட்டால் 1951 ஆம் ஆண்டு XIX ஆவது சட்டத்தின் 100 (2) (பி) பிரிவின் கீழ்வரும் விதிகளையும் அமல்படுத்த வேண்டும். ஏல விற்பனையில் தக்க போட்டி இல்லையென்றால், பின்னர் அக் கட்டடங்களை, துணை ஆணையாளரின் முன் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனைக்குட்பட்டு கோயில் பணியாளர்களுக்கோ, துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கோ அவர்களுடைய சம்பளத்தில் 10 சதவீதத்திற்கு வாடகை விட வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், அத்தகையவர்கள் வீட்டு வாடகைப் படி பெறுவதற்கு தகுதியுடையவர்களாக மாட்டார்கள்.

(1957 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 9 ஆம் தேதி, 4248 எண் வருவாய் நிலை அ.ஆ. 1958 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 18 ஆம் தேதி 17389/57 எண் நி.வை.மு.)

40. 1955 ஆம் ஆண்டு XXV ஆவது சட்டத்தின் 3 ஆவது பிரிவின்படி, சாகுபடி செய்பவர்களை வெளியேற்ற முடியாதபோது, அந்நிலங்களைப் பயிரிடுவோர்கள் தாங்களே தங்கள் வசம் வைத்துக் கொள்வதற்கு உரிமை உண்டு ; எனவே, பயிரிடுபவர்கள்

தொடர்ந்து தாங்களே அந்நிலங்களை தங்கள் வசம் வைத்துக் கொள்வதை 1951 ஆம் ஆண்டு XIX ஆவது சட்டத்தின் 29, 35 ஆவது பிரிவுகளின் நிபந்தனைகள் அல்லது அச் சட்டத்தின் 100 (2) (m) பிரிவின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் தடை செய்யா.

(1956 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 8 ஆம் தேதி, 308/50 எண் அரசாங்க வழக்கறிஞர் கருத்து, 1957 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 9 ஆம் தேதி 17132/56 எண் ப.மு.)

41. சொத்துக்களைக் குத்தகைக்கு விடும்போது, எந்தக் காரணமாகவேனும் சொத்துக்களை உள் குத்தகைக்கு விடக் கூடாது எனவும், எந்த காரணமாகவேனும் குத்தகை எடுத்தவர் கட்டடங்கள் கட்டக்கூடாது எனவும், உள் குத்தகைக்கு விடப் பட்டவுடனே குத்தகை தானாக அற்று விடும் எனவும், ஏல விற்பனை அறிவிப்பிலும் குத்தகைப் பத்திரத்திலும் நிபந்தனை விதிக்க வேண்டும்.

(1958 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 1 ஆம் தேதி, 2599/58 எண் ப. மு.)

(1958 ஆம் ஆண்டு, எப்பிரல் மாதம், 7 ஆம் தேதி, 2311/58 எண் ப. மு.)

42. கோயிலுக்கு அருகிலுள்ள கோயில் நிலங்களை விற்பனை செய்யக்கூடாது. அவற்றைக் கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில் நீண்ட கால குத்தகைக்கு விடலாம்:—

(i) நிலங்களில் கட்டடங்கள் கட்டப்பட்ட அந்நிலங்களை இந்து அல்லாத ஒருவருக்கு குத்தகை எடுத்தவர் உள் குத்தகைக்கு விடக் கூடாது;

(ii) நிலங்களையும், கட்டடங்களையும் இந்து அல்லாத ஒருவர் உரிம முறையிலும் அனுபவிக்க குத்தகை எடுத்தவர் அனுமதிக் கலாகாது.

(1958 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 18 ஆம் தேதி, 683 எண் நிலை உள்துறை அ.ஆ.)

43. ஹரிஜனங்களுக்கு நிலங்களை குத்தகைக்கு விடுவது.— ஹரிஜனங்களுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விட வேண்டுமென்று

சமய நிலையங்களின் அதிகாரிகளை, வற்புறுத்துவதற்காக நிர்வாக அறிவுரைகளைப் பிறப்பிப்பதோ பொருத்தமான விதிகளுக்கு திருத்தம் வெளியிடவோ இயலாது. ஆயினும், கூட்டுறவு அடிப்படையில் கோயில் நிலங்களைப் பயிர் செய்வதை அரசாங்கம் ஆதரிக்கிறது. எனவே, இதர நிபந்தனைகள் மனநிறைவளிக்குமானால், எங்கெல்லாம் ஹரிஜனங்கள் கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் கூட்டுறவு விவசாயப் பண்ணையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(1959 ஆம் ஆண்டு, மே மாதம், 2 ஆம் தேதி, 135 எண் வருவாய் நிலை அ.ஆ. 13815/59 எண் நி.வை.மு.)

44. கோயில் புறம்போக்கு நிலங்கள்—நில ஒப்படை செய்தல்.—கோயில்களின் தேவைகளுக்கு அதிகமாகவுள்ள புறம்போக்கு நிலங்களை, பயிர் செய்யப்படுவதற்கு மட்டுமன்றி, வீடுகள், வணிக கட்டடங்கள் முதலியவற்றிற்காகவும், இதர காரியங்களுக்காகவும் கோயில் அதிகாரிகள் குத்தகைக்கு விடலாம்; ஆனால், அவ்வாறு கொடுப்பது கோயிலின் வருவாயைப் பெருக்குவதில் பயனுடையதாய் இருத்தல் வேண்டும். மேலே குறிக்கப்பட்ட சலுகை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அளிக்கப்படுகிறது:—

(i) கோயில் தேவைக்கு அதிகமாகவுள்ள புறம்போக்கு நிலங்களை ஒப்படையின் பேரில் கொடுப்பதற்காக அனுமதி பெற விண்ணப்பஞ் செய்து கொள்ளும் முன்பு கோயில் அதிகாரிகள், இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் இசைவை பெற வேண்டும்.

(ii) பயிர் செய்யப்படக் கூடிய நிலங்களாக இருந்தால், மாத்திரம் அவற்றைப் பயிர் செய்வதற்கு மாத்திரமே அளிக்க வேண்டும்; பயிர் செய்வதற்குத் தகுதியற்ற நிலங்களாக இருப்பின் அவற்றை கோயிலின் நன்மைக்காகப் பிறவகைகளில் பயன்படுத்தலாம்.

(1960 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 25 ஆம் தேதி, 3333 எண் வருவாய் அ.ஆ. நிலை, 1930 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 17 ஆம் தேதி 31217/60 எண் நி.மு.)

45. வஜா.—ஒப்பந்தத்தின்படி குத்தகை எடுத்தவர் தொகை செலுத்த வேண்டும்; மேலும் ஒப்பந்தத்தின்படி அவருக்குள்ள கடமையினின்றும் நியாயமான கொள்கைகளை அனுசரித்து அவரை விடுவிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. "ராஜிகம்", "தேவிகம்" ஆகியவை நீங்கலாக நிபந்தனையற்ற குத்தகைகளைப் பொறுத்த வரையில் நியாயமான கொள்கைகளை அனுசரித்து நீதிமன்றமானது வஜா அளிக்க முடியாது.

(சென்னை உயர்நீதிமன்றத்தின் 517/56, எண் தீர்ப்பு; 1959 ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 8 ஆம் தேதி, 17817/59 எண் சுற்றறிக்கை.)

46. பிரிவு—பராதீனங்கள்.—நல்ல வாய்ப்புள்ள நடவடிக்கைக் காக ஒப்பளிப்பு வழங்க இந்தப் பிரிவு அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. அத்தகைய நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வது மட்டும் அதன் நோக்கமன்று:—

(1957 ஆம் ஆண்டு, மே மாதம் 18 ஆம் தேதி, 7040 ஈ-10-56 எண் அரசாங்க குறிப்பாணை; 1957 ஆம் ஆண்டு மே மாதம், 15 ஆம் தேதி 17152/55 எண் நி.மு.)

சட்டப்படி இயற்றப்பட்ட ஆணைகளை மறு ஆய்வு செய்வதற் காக இந்தச் சட்டத்திலோ, இதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால், புதிய யோசனைகளை அனுப்பலாம்.

(1957 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 13 ஆம் தேதி, 66290/ஈ1-57 எண் அரசாங்க குறிப்பாணை.)

IX ஆவது அத்தியாயம்—நிர்வாக அலுவலர்கள்.

47. நிர்வாக அலுவலர் இன்னார் என்பது இச்சட்டத்தின் 6 (9) ஆவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 45, 74 பிரிவுகளின்படியும், நிலையத்திற்காகப் பொருந்தும் திட்டத்தின் ஏற்பாடுகளின் படியும் அவர் நியமிக்கப்படுகிறார். இச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின்படி நிர்வாக அலுவலர்கள் அரசாங்கப் பணி யாளர்களாவார்கள். அவர்களுடைய சம்பளங்கள், படிகள் முதலியவை, மாநிலத் தொகு நிதியிலிருந்து முதலில் கொடுக்கப்

படுகின்றன. நிர்வாக அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்கள், படிகள் முதலியவற்றை ஆணையாளர் சம்பந்தப்பட்ட சமய நிலையங்களிலிருந்து வசூலித்து அதை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிதிக்கு வரவு வைக்க வேண்டும்—

வரவுகள்—கணக்கின் தலைப்பு—26 ஆவது பத்தியைக் காண்க.	II ஆவது பாகம்
பட்டுவாடாக்கள்—கணக்கின் தலைப்பு—29 ஆவது பத்தியைக் காண்க	
ஓய்வூதிய உதவித் தொகை—33 ஆவது பத்தியைக் காண்க.	
முப்பிரதி செலுத்துச் சீட்டுகளில் பணம் செலுத்துவது—35 ஆவது பத்தியைக் காண்க.	
பயணப்படி—78 ஆவது பத்தியைக் காண்க.	
பட்டியல்கள்—தயாரிப்பது—135 ஆவது பத்தியைக் காண்க.	

(1960 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 9 ஆம் தேதி, 757 என் நிலை அரசாங்க ஆணையில், எல்லா நிர்வாக அலுவலர்களும் அரசிதழ் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.)

48. நிர்வாக அலுவலர்களுடைய சம்பளங்கள் முதலியவற்றைச் சம்பந்தப்பட்ட நிலையங்களிலிருந்து வசூல் செய்யப்படுவதை கவனித்து வருவதற்காக, புதிய வரிசை 21 என் பொதுப் படிவ XXVIII பதிவேடு ஒன்று ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வரப்படுகிறது. 1960 ஆம் ஆண்டு, மே மாதம், 16 ஆம் தேதி 70/60 என் கால முறை விவர அறிக்கையின்படி, ஒவ்வொரு மாதம் 10 ஆம் தேதிக்கு முன் அனுப்பப்படும் விவரங்களிலிருந்து உதவி ஆணையாளர்கள் இப்பதிவேட்டில் பதிவுகள் செய்கிறார்கள். எல்லா உதவி ஆணையாளர்களுக்கும் 1960 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி 6144/60 என் மூன்றாண்டு முடிவுச் செய்தி

அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட படிவத்தில் விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அப்படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

கொடுக்கப்படும் சம்பளங்கள்.

(1) மாதத்துக்காக.	(2) .... மாதத்தில் கொடுக்கப்பட்டது.	(3) தொகை.	(4) கருவூலத்தின் பெயர்.	(5) செலவுச் சீட்டின் எண்ணும் தேதியும்.
		ரூ.		

வசூல் இனங்கள்.

(6) தேதி.	(7) தொகை	(8) கருவூலச் செலுத்தற் சீட்டின் எண்.	(9) பாக்கி.	(10) குறிப்புரை.
	ரூ.			

கொடுக்கப்பட்டப் பயணப்படி.

(1) தூர அளவு.	(2) தொகை.	(3) கருவூலத்தின் பெயர்.	(4) செலவுச் சீட்டின் எண்ணும் தேதியும்.
	ரூ.		

வசூல்கள்.				
(5) தேதி.	(6) தொகை. ரூ,	(7) செலுத்தச் கருவூலச் சீட்டு.	(8) பாகம்.	(9) குறிப்புரை.

49. கணக்குத் துறை தலைவர் கீழ்க்காணும் ஓய்வூதிய உதவித் தொகை வசூல் முறையைத் தெரிவித்துள்ளார் :—

எல்லா நிர்வாக அலுவலர்களின் பெயர்கள், அந்த ஆண்டில் அலுவலர்கள் பணிபுரிந்த கால அளவு, சம்பள அளவு முறை, உதவித் தொகை ஆகியவற்றைக் காட்டும் தொகுப்பு விவரப் பட்டியலை, ஆணையாளர், ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் தேதிக்குள் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். உதவி ஆணையாளர் ஒவ்வொருவருடனும் இணைக்கப்பட்டுள்ள எல்லா நிர்வாக அலுவலர்களின் பெயர்களும் அதில் சேர்க்கப் பட்டுள்ளன என்பதற்கான சான்றுடன் உதவி ஆணையாளர் ஒவ் வொருவரும் தமது அதிகார எல்லைக்குள் பணியாற்றுகிற அலுவலர் களுக்காகவும் இயன்றமட்டில் தனியாக விவரப் பட்டியலைத் தயாரிக்கலாம்.

50. அவசியமான அளவில் சரிபார்த்த பின்னர், வரவேண்டிய உதவித் தொகை கணக்குத் துறைத் தலைவரால் சரிக்கட்டப்பட்டு ஆணையாளருக்குத் தெரிவிக்கப்படும். ஆணையாளர், சம்பந்தப் பட்டவர்களின் பணிப் பதிவேட்டில் இது விவரம் குறிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(கணக்குத் துறைத் தலைவர் அரசாங்கத்துக்கு எழுதிய 1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் தேதி, XXV அ. நிலை 111/22-29 59-3-559 எண் கடிதம், 1961 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி 807 ஈ 1/2 எண் அரசாங்க வருவாய்த் துறை மேற் குறிப்பு, 1961 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 19 ஆம் தேதி, 5797/61 எண் நி.மு.)